මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: டீஐபீ /பீஜஎம்/ 4/ 3/9 பொது
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2010.12.24

*[ மொழிபெயர்ப்பு ]*

**வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம்:01(1)/ 2010**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,

**சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்தல் - பொது அறிவுரைகள்**

2010.12.10 ஆந்திகதியின் வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகளின் சுற்றறிக்கை இலக்கம் 01/2010 இன் கீழ் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை சிபாரிசு செய்யும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகள் மீது உங்கள் கவனத்தைச் செலுத்தவும்.

02. சுற்றறிக்கை 01 (அ), (ஆ), (இ), மற்றும் (ஈ) ஆகியவற்றின் கீழ் தகைமை பெறுவதற்கான குறிப்பிட்ட அலுவலர்கள், “ சிரேஷ்ட மட்டத்தில்” நிறைவேற்றுப் பதவியொன்றில் ஆறு (06) வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதோடு, (உ), (ஊ), (எ), மற்றும் (ஏ), ஆகியவற்றின் கீழ் தகைமை பெறுவதற்கு சிரேஷ்ட மட்டத்தில் நிறைவேற்றுப் பதவியொன்றில் பன்னிரெண்டு (12) வருட சேவைக் காலம் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. சுற்றறிக்கையின் 02.01. (ஆ)விற்கு ஏற்ப, இயைபு முறை குறியீட்டுத் தலைப்பு இலக்கம் (HS Heading) 87.03இன் கீழ், ஆட்களின் போக்குவரத்துக்காக திட்டமிடப்பட்ட (Principally designed for the transport of persons), புதிய (Brand new) அல்லது ஒரு வருடத்துக்கு மேல் பயன்படுத்தப்படாத கார், ஜீப், ஸ்டேசன் வெகன் மற்றும் கெப் வாகனங்களாக இருக்க வேண்டும்.

04. பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் இறக்குமதியின் போது, குறிப்பிட்ட வாகனத்தின் காலமாகக் கருதப்படுவது 1681/14 மற்றும் 2010.11.22 ஆந்திகதியின் வர்த்தமாணி அறிக்கைக்கு ஏற்ப, அவ்வாகனம் முதன் முறையாக பதிவு செய்யப்பட்ட திகதி (date of first registration) மற்றும் கப்பலேற்றிய திகதி (கப்பலேற்றல் பட்டியல் திகதி / date of Bill of Lading) க்கும் இடையிலான காலப்பிரிவாகும்.

05. இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் / கொள்வனவு செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கான, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி, தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி உட்பட

அனுமதிப் பத்திரத்தின் உரிமையாளரினால் செலுத்த வேண்டிய, பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மொத்த வரியின் அளவு பொறுத்தமான முறையில் உற்பத்தி (விசேட ஒழுங்குகள்) வரி மற்றும் சுங்க வரி போன்றவற்றை பொருந்த வைப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுக்கும்.

| வாகனத்தின் வகை மற்றும் சிலிண்டரின் உச்ச இயலளவு (பெற்றோல் / டீசல் ) | சுங்கப் பெறுமதி (CIF அடிப்படை) யின் மீது செலுத்த வேண்டிய வரி விகிதம் (%) |
|---|---|
| 1000 CC | 50 |
| 1600 CC | 55 |
| 2000 CC | 60 |
| 2600 CC | 70 |

06. இச்சலுகை அடிப்படையிலான பிரேரணைத் திட்டத்தின் கீழ் வாகனங்களுக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்கள் இச்சுற்றிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் (Annexure 1) போன்று விண்ணப்பப்பத்திரம் ஒன்றை (பிரதி ஒன்றை) ஆங்கில மொழியில் மாத்திரம் (கணணிமயப்படுத்தலை இலகுபடுத்துவதற்காக) பூர்த்தி செய்து, அவ்விண்ணப்பப் பத்திரம் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் " சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு, பணிப்பாளர் நாயகம், வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், 3ஆம் மாடி, திறைசேரி, கொழும்பு 01 எனும் விலாசமிடப்பட்ட கடித உறையொன்றுடன் தமது திணைக்கள / நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

07. இச்சலுகை அடிப்படையிலான பிரேரணைத் திட்டத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தகுதி உடைய அலுவலர்கள் யார் என்பதை சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு ஏற்ப, திணைக்களங்களின் / நிறுவனங்களின் தலைவரினால் சரியான முறையில் இனங்கண்டு, முன் வைக்கப்படும் விண்ணப்பப் பத்திரம் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, அவசியமான தகைமைகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்றன சரியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளனவா போன்றன உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட சிரேஷ்ட அலுவலர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

08. அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்திரங்கள், தபால் மூலம் மாத்திரம் பணிப்பாளர் நாயகம், வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், 3ஆம் மாடி, திறைசேரி, கொழும்பு 01 எனும் விலாசத்துக்கு குறிப்பிட்ட அமைச்சினால் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதோடு, விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட முறையில் சென்று நேரடியாக ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாது.

09. குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப் பெறும் ஒழுங்குகளுக்கு அமைய, வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும தொடர் இலக்க ஒழுங்கிற்கு ஏற்ப, அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படும்.

10. சலுகை அடிப்படையிலான அனுமதிப் பத்திரங்களை அடிப்படையாக வைத்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் சுங்கத்திலிருந்து அகற்றும் செய்யும் போது அனுமதிப் பத்திரங்களின் உரிமையாளர்களின் வசதிக்காக சுங்கப்

பணிப்பாளரினால் அகற்றுவதற்காக தனியான ஒரு அகற்றுவதற்கான ஒரு விசேட கருமபீடம் ஒன்று திறந்து வைக்கப்படும்.

11. இச்சுற்றறிக்கை தொடர்பாக/ சுங்கத்தின் போது அல்லது நிறுவன ரீதியாக தோன்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஏதாவது தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படின் 011- 2484930 எனும் தொலை பேசி இலக்கத்துடன் அல்லது admin@ttipd.treasury.gov.lk எனும் மின்னஞ்சல் மூலம் பிரதிப் பணிப்பாளர், திருமதி. எஸ்.எச்.டீ.பீ. கலுதந்திரி உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பீ.பீ. ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர் மற்றும்
நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதி செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவை செயலாளர்
4. கணக்காய்வாளர்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களம்
6. ஆணையாளர் நாயகம், மொட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்